(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 226.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2012 நவெம்பர் 15, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1893/ '11

1.

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் கெக்கனதுர எல்லகந்த வாவியின் குளக்கட்டின் சில இடங்களிலிருந்து நீர் கசிவதற்கு ஆரம்பித்துள்ளதால் அருகாமையில் அமைந்துள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதையும்;

(ii) வாவியை மறுசீரமைக்கும்போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகளின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்பதையும்;

(iii) பிரதேச மக்கள் இந்த நிலைமை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்திருந்த போதிலும் இதுவரை அதற்கான தீர்வு கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கெக்கனதுர எல்லகந்த வாவியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின்போது ஏற்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) வாவியை மீண்டும் மறுசீரமைத்து நீர் கசிவினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக எடுக்கப்படும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2158/ '11

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குளியாப்பிட்டிய கல்வி வலயத்தில் பண்டுவஸ்நுவர கல்விக் கோட்டத்தில் ஹெட்டிபொல மாதிரி முதல் நிலைப்பாடசாலையில் பலநோக்கு மும்மாடிக் கட்டிடமொன்று அமைக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இதற்கான மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்;

(iii) இதற்கான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்ட முறை யாதென்பதையும்;

(iv) இந்நிர்மாணப் பணிகள் அரச நிதி ஏற்பாட்டில் செய்யப்படாவிடின் நிதி ஏற்பாடுகளை வழங்கியவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்;

(v) இந்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(vi) உடன்படிக்கையின் படி நிர்மாண வேலைகள் முடிவடைய வேண்டிய திகதி யாதென்பதையும்

(vii) இப்போது இந்நிர்மாண வேலைகள் முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(viii) நிர்மாணப்பணிகள் முடிவடையவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2205/ '11

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்க மரக் கூட்டுத்தாபம் தொடர்பில்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன யாவையென்பதையும்;

(ii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினர் எண்ணிக்கை, கிரயம் மற்றும் ஒரு பணியாளருக்கான இலாபம் போன்றன யாதென்பதையும்;

(iv) கழிப்பனவுகள் அல்லது அரசாங்கத்திற்கு செலுத்திய அறவீடுகள் யாதென்பதையும்

வருடாந்த அடிப்படையில் கூறுவாரா?

(ஆ) (i) அரசாங்க மரக் கூட்டுத்தாபத்தின் ஏதாவது பணம் கடந்த 5 ஆண்டு காலங்களில் பதிவழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பதிவழிக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) என்ன காரணத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டது என்பதனையும்;

(iv) அவ்வாறு எப்போது நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கடந்த 5 ஆண்டு காலப்பகுதியிலே அது பணம் பயன்படுத்திய விதத்தை விட சிறந்த முறையில் வினைத்திறனாக பயன்படுத்தியிருக்க முடியுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2325/ '12

4\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக கல்வி அமைச்சின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட வருடம் யாது;

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) ஆசிரிய சேவை 3-II தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட ஒரு ஆசிரியருக்கு வழங்கப்படும் தற்போதைய மாதாந்த சம்பளம் யாது;

(v) ஆசிரிய உதவியாளர்களின் பதவிப் பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட அனைவரையும், ஆசிரிய சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் நிரந்தரமாக்கி, குறித்த தரத்திற்கான சம்பள மட்டத்தில் அமர்த்துவதற்கும்;

(ii) ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2381/ '12

5\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வெளிநாட்டுச் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு தரத்தின் அடிப்படையிலும் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இதுவரை,

(i) இலங்கை வெளிநாட்டுச் சேவையில் ஈடுபட்டிருக்கும் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து சேவைக்குச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைய யாதென்பயும்;

(ii) இலங்கை வெளிநாட்டுச் சேவைக்குப் புறம்பாக தூதுவர் அலுவலகங்களில் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(iii) இலங்கைத் தூதுவர் அலுவலகங்களில் பணிபுரியும் நிரந்தர அரச சேவையைச் சாராத வேறு உத்தியோத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே ஆ(ii ) மற்றும் (iii ) இல் வினவப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர், பதவி மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட ஆண்டு ஆகியவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இலங்கை வெளிநாட்டுச் சேவைக்குப் புறம்பாக தூதுவர் அலுவலக சேவைக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுகையில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாது என்பதையும்;

(ஈ) இன்றேல் ஏன்?

2541/ '12

6\.

கௌரவ அனுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை தொடக்கம் பெலியத்த வரை புகையிரத வீதியை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் ஒன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அதன் மொத்த தூரம் எவ்வளவென்பதையும்;

(iii) அதன் நிர்மாணப் பணிக்கான கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனம் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை – பெலியத்த புகையிரத பாதையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக செலவாகும் என எதிர்பார்க்கப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு சீன அரசாங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி கடன் தொகைக்கான வட்டி வீதம், கடனை மீள செலுத்த வேண்டிய காலம், தவணைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2626/ '12

7\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1990 ஒக்டோபர் 18ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல: 44/90 இன் ஏற்பாடுகள் 1996 யூன் 07 ஆம் திகதி தொடக்கம் அமுல்படக்கூடியவாறு மக்கள் வங்கி ஊழியர்களுக்கு ஏற்புடைமையாகின்றது என்பதையும்;

(ii) இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி தனது ஊழியர்களுக்கு இச்சுற்றறிக்கையை ஏற்புடைமையாக்கவில்லை என்பதையும்;

(iii) அரச சேவையின் விசேட தேவைக்காக செயற்படுத்தப்பட்ட 44/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை 1996 திசெம்பர் 23ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டதென்பதையும்;

(iv) அவ்வாறாயினும், பொது நிருவாக சுற்றறிக்கை இல: 44/90 இன் அடிப்படையில் மக்கள் வங்கி செயற்படுத்திய ஓய்வூதியத் திட்டம் இதுவரை இவ்வங்கியினால் கொண்டு நடாத்தப்பட்டுவருகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 44/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்ட திகதி தொடக்கம் செயற்படக் கூடியவாறு 1996 யூன் 7ஆம் திகதிக்கு முன்பிருந்த ஓய்வூதியத் திட்டத்தை மக்கள் வங்கி ஊழியர்களுக்கு மீண்டும் செயற்படுத்துவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2912/ ’12

8.

கௌரவ வசந்த அளுவிகாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1999 ஆம் ஆண்டில் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக ஆட்சேர்க்கப்பட்டவர் களின் எண்ணிக்கை மாகாணங்களுக்கு ஏற்ப வெவ்வேறாக யாது;

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் 2000 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு இவர்கள் மீண்டும் ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்டார்கள் என்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களின் சேவைக்காலத்தை, இவர்கள் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து கவனத்தில் கொண்டு, ஆசிரிய சேவையின் தரம் 2-II ற்கு உயர்த்துவதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கான ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், பல மாகாணங்களைச் சார்ந்த ஆசிரியர்கள், ஆசிரிய சேவையின் தரம் 2-II ற்கு பதவியுயர்த்தப்பட்டு குறித்த சம்பள மட்டத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும்;

(v) மத்திய மாகாணத்தில் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு மேற்படி பதவியுயர்வுகள் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) ஆ(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்ட மத்திய மாகாணத்தின் ஆசிரியர்களையும் தரம் 2-II ற்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

2948/ ’12

9.

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரை கொழும்பிலுள்ள தேசிய வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக காத்திருக்கின்ற நபர்களின் எண்ணிக்கையை அவர் கூறுவாரா?

(ஆ) மேலதிக தீவிர சிகிச்சைப் பிரிவொன்று வழங்கப்படுமாயின் மேற்கூறிய வைத்தியசாலையில் ஒரு நாளில் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சையின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியுமா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) மேற்கூறிய வைத்தியசாலையில் மேலதிக தீவிர சிகிச்சைப் பிரிவொன்றை கொண்டிருப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2950/' 12

10\.

கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சமூர்தி அதிகாரசபையின் சமூர்தி உத்தியோகத்தர் நலனோம்புகை நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) ஆரம்பத்திலிருந்து இற்றைவரை மேற்படி நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது;

(iii) 2012 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் திகதிக்கு, மேற்படி நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை மற்றும் நிதியத்தின் மீதி என்பன வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிதியத்தின்,

(i) நிதியை பயன்படுத்தக் கூடிய கருமங்கள்;

(ii) சட்ட நிலைமையை விபரிக்கின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்;

(iii) அங்கத்தவர் ஒருவரின் நலனோம்புகை வேண்டுகோளுக்கு ஏற்ப கொடுப்பனவை மேற்கொள்வதற்கு எடுக்கும் காலம்; மற்றும்

(iv) அங்கத்தவர் ஒருவருக்கு உரித்தான கொடுப்பனவை மேற்கொள்கின்றபோது குறிப்பிட்ட காலத்தை தாண்டுவதாயிருப்பின், அதற்கான காரணம்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சமூர்தி உத்தியோகத்தர் நலனோம்புகை நிதியத்தைப் பயன்படுத்தி ஏனைய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், ஆரம்பத்திலிருந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்டுள்ள இலாபம் எவ்வளவு;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட இலாபம் பகிர்ந்தளிக்கப்படும் தரப்பினர்கள் யாவர்;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தரப்பினரிடையிலும் பகிர்ந்தளிக்கப்படும் பணத்தொகை வெவ்வேறாக யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1894/ '11

11\.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மாகந்துர நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பசுமை நகரமொன்றையும் பசுமை விளையாட்டுத் தொகுதியொன்றையும் நிர்மாணிக்கின்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது இவற்றின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காக நிதி வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாதென்பதையும்;

(iii) இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பசுமை நகரத்தினதும் பசுமை விளையாட்டுத் தொகுதியினதும் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2159/ '11

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிருவகிக்கப்படும் தோட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு தோட்டத்திலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவ்வூழியர்கள் தொடர்பில் மாதமொன்றுக்கு ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய பணத்தொகை யாது என்பதையும்;

(ii) இதன் பிரகாரம் இதுவரை ஊழியர் சேமலாப நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத் தொகை யாது என்பதையும்;

(iii) உரிய முறையில் மேற்படி ஊழியர் சேமலாப நிதியம் வைப்புச் செய்யப்படாவிடின் ஒவ்வொரு தோட்டத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டியுள்ள நிலுவைப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மொத்த நிலுவைப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) இந்நிலுவைப் பணத்தொகை எவ்வாறானதொரு நடவடிக்கைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(vi) இந் நிலுவைப் பணத்தொகை செலுத்தப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2206/ '11

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுகளுக்கான 2012 ஆம் ஆண்டு மொத்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒதுக்கீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் யாதென்பதையும்;

(iv) அந்த அமைச்சுகளில் வேலை செய்யும் ஆட்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதனையும்;

(v) மாதமொன்றுக்கு ஒரு அமைச்சுக்கான மொத்த செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஏதேனும் அமைச்சுகளை இல்லாதொழிக்கவோ அல்லது குறைக்கவோ முடியுமா என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2326/ '12

14.

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006-09-11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை வளர்ச்சியடையச் செய்வதாகவும்;

(ii) ஏனைய மருத்துவ பீடங்களின் 2005-2006 மாணவர் குழுக்களுடன் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவ மாணவியர்களுக்கும் கட்டுறுபயில்வு நியமனங்கள் வழங்கப்படுமெனவும்;

சனாதிபதி அவர்கள் வாக்குறுதியளித்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஏனைய மருத்துவ பீடங்களில் காணப்படும் வசதிகள் ரஜரட்ட மருத்துவப் பீடத்திலும் போதியளவு தாபிக்கப்பட்டுள்ளதா;

(ii) பேராசிரியர் சிகிச்சைப் பயிற்சிகளுக்குத் தேவையான கட்டிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் தற்போது ரஜரட்ட மருத்துவ பீடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா;

(iii) 2011 மே மாதத்தில் பேராசிரியர் சிகிச்சை பயிற்சிக்காக அனுப்ப வேண்டியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) தற்போது இவர்கள் மேற்படி பயிற்சியை ஆரம்பித்துள்ளார்களா;

(v) இல்லையெனில், இதற்கு மாணவர்களை அனுப்புவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2542/ '12

15.

கௌரவ அநுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி முதல் மாத்தறை வரை திருத்தியமைக்கப்பட்டு வருகின்ற புகையிரத வீதியின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி புகையிரத வீதியை திருத்தியமைப்பதற்கான கருத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ள நிறுவனம் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் இணக்கப்பாட்டிற்கு அமைய அகற்றப்பட்ட பழைய புகையிரத தண்டவாளங்களின் உரிமை யாருக்கு கிடைக்க வேண்டும் என்பதையும்;

(ii) அகற்றப்பட்ட தண்டவாளங்கள் விற்பனை செய்யப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி தண்டவாளங்களை கொள்வனவு செய்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) தண்டவாளங்கள் விற்பனை செய்யப்பட்ட விலை மற்றும் விற்பனையின் மூலம் கிடைத்த மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2012 நவெம்பர் மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை, 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 21ஆம் திகதி புதன்கிழமை, 22ஆம் திகதி வியாழக்கிழமை, 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 24ஆம் திகதி சனிக்கிழமை, 26ஆம் திகதி திங்கட்கிழமை, 28ஆம் திகதி புதன்கிழமை, 29ஆம் திகதி வியாழக்கிழமை, 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களும் மற்றும் திசெம்பர் 03ஆம் திகதி திங்கட்கிழமை, 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 05ஆம் திகதி புதன்கிழமை, 06ஆம் திகதி வியாழக்கிழமை, 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 08ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நாட்களும் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2013)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1) ,— 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2013)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2012 நவெம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் திசெம்பர் மாதம் 07ஆம் திகதி வரை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2) ,— 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2013)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2012 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி சனிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணி வரையும் மற்றும் பி.ப 1.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

கௌரவ ஜானக பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

“இலங்கை மரபுரிமைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2013) — (ஒதுக்கப்பட்ட ஐந்தாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2012, நவெம்பர் 08) [1].

* 2.

திவிநெகும சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2012, நவெம்பர் 06) [1].

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட இன்றைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு.எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு.எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2009,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2011.10.19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2009.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2011.11.03 ஆந் திகதி
பரிசீலிக்கப்பட்டது)

* 8.

சுகாதார அமைச்சர்,— சீதுவை, விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2008,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2011.02.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2008.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2011.04.05 ஆந் திகதி
பரிசீலிக்கப்பட்டது)

* 9.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2009,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2011.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2009.12.31ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2012.06.19 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 10.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2009,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2011.10.19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2011.11.03 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 11.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2010,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2012.06.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2010.12.31ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2012.06.19 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 12.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

16.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

பா. 167/ '12

19.

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ மொஹான் லால் கிரேரு

கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ ரெஜினோல்ட் குரே

கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன

கௌரவ மஹிந்த அமரவீர

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ லசந்த அளகியவண்ண

கௌரவ சனத் ஜயசூரிய

கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா

கௌரவ ஜகத் பாலசூரிய

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேக்கா

கௌரவ தயாசிறித திசேரா

கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன்

கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

கௌரவ எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ நிர்மல கொத்தலாவல

கௌரவ விஜித பேருகொட

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ எச். ஆர். மித்ரபால

கௌரவ லலித் திசாநாயக்க

கௌரவ விஜய தஹநாயக்க

கௌரவ சரண குணவர்தன

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ அசல ஜாகொடகே

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ ரோஹன திசாநாயக்க

கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன

கௌரவ ஏ. பி. ஜகத் புஷ்பகுமார

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ சாந்த பண்டார

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ விக்டர் அந்தனீ

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ ஜனக பண்டார தென்னக்கோன்

கௌரவ மில்ரோய் பர்னாந்து

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ ஹுனைஸ் பாறூக்

கௌரவ (திருமதி) உபேக்ஷா சுவர்ணமாலி

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ ஹேமால் குணசேக்கர

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ குமார வெல்கம

கௌரவ ஜானக பண்டார

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ ஏ. ஆர். எம் . அப்துல் காதர்

கௌரவ ருவன் ரணதுங்க

கௌரவ பீலிக்ஸ் பெரேரா

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார

கௌரவ பிரேமலால் ஜயசேகர

கௌரவ சனீ ரோஹன கொடிதுவக்கு

கௌரவ நெரன்ஜன் விக்கிரமசிங்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ காமினி விஜித் விஜிதமுனி த சொய்சா

கௌரவ பி. தயாரத்ன

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ காமினி லொகுகே

கௌரவ ஏர்ல் குணசேக்கர

கௌரவ சீ.ஏ. சூரியஆரச்சி

கௌரவ உதித் லொக்குபண்டார

கௌரவ வி.கே. இந்திக

கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ பி. பியசேன

கௌரவ குணரத்ன வீரகோன்

கௌரவ ஏ.எம். சாமிக்க புத்ததாஸ

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ இந்திக பண்டாரநாயக்க

கௌரவ திஸ்ஸ கரல்லியத்தே

கௌரவ பிரபா கணேசன்

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜீவன் குமாரணதுங்க

கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய

கௌரவ எஸ். பீ. நாவின்ன

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர

கௌரவ சஜின் த வாஸ் குணவர்தன

கௌரவ ஜே. ஆர். பி. சூரியப்பெரும

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ திலும் அமுணுகம

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ டபிள்யூ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன

கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்

கௌரவ பெருமாள் ராஜதுரை

கௌரவ சில்வேஸ்திரி அலன்றின்

கௌரவ (திருமதி) நிருபமா ராஜபக்ஷ

கௌரவ வை.ஜீ. பத்மசிரி

கௌரவ நவின் திசாநாயக்க

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ பசீர் சேகு தாவூத்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் பதவியிலிருந்து கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவை அகற்றுவதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு பாராளுமன்றத்தின் பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கும் பொருட்டு அரசியலமைப்பின் 107(2) உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேணை:-

1. செலின்கோ கூட்டுத் தொழில்முயற்சிக்குரிய கம்பனிகளான செலின்கோ ஸ்ரீ ராம் கெப்பிற்றல் மனேஜ்மன்ற், கோல்டன் கீ கிறெடிட் கார்ட் கம்பனி மற்றும் பினேன்ஸ் அன்ட் கரண்ரி கம்பனி லிமிட்றெட் ஆகிய கம்பனிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையே 262/2009, 191/2009 மற்றும் 317/2009 ஆம் இலக்க அடிப்படை உரிமைகள் விண்ணப்பங்கள் தொடர்பிலான வழக்குகள் உயர் நீதிமன்றத்தின் பிறிதொரு நீதிபதிகள் குழுவினால் விசாரணை செய்யப்பட்டு வருகையில், மேற்கூறப்பட்ட வழக்குகளை மேற்படி நீதிபதிகள் குழுவிலிருந்து அகற்றி, தமது நீதிமன்றத்தில் மேலதிக விசாரணைகளுக்காக எடுத்து, மேற்படி வழக்குகளை விசாரணை செய்கின்ற நீதிபதிகள் குழுவின் தலைமை நீதிபதியாக செயலாற்றி அந்த வழக்குகளின் விடயப்பொருளாகவுள்ள செலின்கோ வீடமைப்பு மற்றும் ஆதனங்கள் கம்பனி என அழைக்கப்பட்ட, சிற்றி ஹவுசின் அன்ட் ரியல் எஸ்டேட் கம்பனி லிமிட்றெட் மற்றும் செலின்கோ கொண்டொமீனியம் லிமிட்றெட் என அழைக்கப்பட்ட தற்போது டிரிலியம் ரெசிடென்சீஸ் என அழைக்கப்படும் நிறுவனத்திற்குரிய கொழும்பு 08, எல்விட்டிகல மாவத்தை, 153 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள, 262/2009 ஆம் இலக்க உயர் நீதிமன்ற அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் தொடர்பிலான வழக்கின் ஆதனங்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டத்திலிருந்து 2சீ/எப்2/பி4 ஆம் இலக்க மற்றும் 153/1-2/4 ஆம் ஆதன வரி இலக்க வீட்டை, அவுஸ்திரேலியாவின் மேற்கு அவுஸ்திரேலியா 6016, மவுண்ட் ஹோதோர்ன், எஜீனா வீதி, 127 ஆம் இலக்க இடத்தில் வசிக்கும் ரேணுகா நிரன்ஜலி பண்டாரநாயக்க மற்றும் கபில ரன்ஜன் கருணாரத்ன ஆகிய இருவராலும் வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு கே.பீ. அரோஷி பெரேராவின் 823 ஆம் இலக்க விசேட அற்றோனி தத்துவத்தைப் பயன்படுத்தி, ரேணுகா நிரன்ஜலி பண்டாரநாயக்க மற்றும் கபில ரன்ஜன் கருணாரத்ன ஆகிய இருவரினதும் பெயருக்கு கொள்வனவு செய்துள்ளதாதலாலும்;

2. மேலே கூறப்பட்ட ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றபோது, ஈட்டப்பட்ட விதத்தினை வெளிப்படுத்த முடியாத ரூபா 19,362,500 பணத் தொகையை மேற்படி ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர், மேற்படி ஆதனத்தை விற்பனை செய்த சிற்றி ஹவுசின் அன்ட் ரியல் எஸ்டேட் கம்பனி லிமிட்றெட் மற்றும் டிரிலியம் ரெசிடன்சீஸ் கம்பனிக்கு காசாகச் செலுத்தியுள்ளதாதலாலும்;

3. என்டீபி வங்கியின் கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள கிளையில் 106450013024, 101000046737, 100002001360 மற்றும் 100001014772 ஆகிய கணக்குகளில் 2011 ஏப்பிரல் 18 முதல் 2012 மார்ச் 27 வரையிலான காலத்தினுள் ஏறத்தாழ ரூபா 34 மில்லியன் வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்ததன் பின்னர் அத் தகவலை நீதித்துறை அலுவலர் ஒருவரால் வழங்கப்பட வேண்டிய வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடாதிருந்ததாதலாலும்;

4. மேலே கூறப்பட்ட என்டீபி வங்கிக் கிளையின் கணக்குகளான 106450013024, 101000046737, 100002001360, 100001014772, 100002001967, 100101001275, 100110000338, 100121001797 மற்றும் 100124000238 இலக்கங்களையுடைய ஒன்பது கணக்குகள் உள்ளிட்ட பல்வேறு வங்கிகளிலும் இருபதுக்கும் அதிகமான வங்கிக் கணக்குகளைப் பேணிவந்து, அத் தகவல்களை நீதித்துறை அலுவலர் ஒருவரால் வழங்கப்பட வேண்டிய வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடாதிருந்ததாதலாலும்;

5. தற்போது கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் முன்னேயுள்ள 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் மற்றும் / அல்லது ஊழல் பற்றிய குற்றங்கள் தொடர்பிலான வழக்கில் மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவின் சட்ட ரீதியான கணவரான திரு. பிரதீப் காமினீ சுராஜ் காரியவசம் சந்தேக நபராக காணப்படுவதாதலாலும்;

மேலே கூறப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள மேற்கூறிய நீதிமன்றத்தின் நீதவானை இடமாற்றிய, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அகற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ள நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியை, அரசியலமைப்பின் 111 ஈ(2) உறுப்புரையின் பிரகாரம் மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க ஏற்றிருப்பதாதலாலும்,

மேற்கூறிய நீதிமன்றத்தினால் பேணப்பட்டு வருகின்ற நீதிமன்ற அறிக்கைகள், பதிவேடுகள் மற்றும் பிற ஆவணங்களைப் பரிசோதிக்கின்ற அதிகாரம் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் அரசியலமைப்பின் 111 ஏ(3) உறுப்புரையின் கீழ் மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாதலாலும்;

மேலே கூறப்பட்டவாறு கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவின் சட்ட ரீதியான கணவரான திரு. பிரதீப் காமினீ சுராஜ் காரியவசத்துக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஏற்புடையதான வழக்கின் காரணமாக பிரதம நீதியரசர் பதவியில் தொடர்ந்தும் செயலாற்றுவதற்கு மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க தகுதியற்றவராதலாலும், பிரதம நீதியரசர் பதவியில் இவர் தொடர்ந்தும் செயலாற்றுவதன் காரணமாக நீதி நிருவாகச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு தடையாயிருப்பதாலும் மற்றும் நீதி நிருவாகம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் அதன் மூலம் மீறப்படுவதாலும் மற்றும் நீதி நிறைவேற்றப்படுதல் மட்டுமன்றி நீதி நிறைவேற்றப்படுவதென்பது புலப்படக்கூடியதாயிருத்தல் வேண்டுமென்பதாதலாலும்;

6. முதனிலை நீதிமன்றங்களின் மூப்புநிலை அலுவலர்களிலிருந்து நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் நியமிக்கப்படுதல் வேண்டுமென அரசியலமைப்பின் 111 ஏ உறுப்புரையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்போது, கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் என்ற வகையில் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளராக அவரது பதவிநிலையிலிருந்து செயலாற்றி, முதனிலை நீதிமன்றங்களில் தகுதிவாய்ந்த மூப்புநிலை நீதித்துறை அலுவலர்கள் உள்ளபோது நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக அவ்வாறல்லாததொரு அலுவலரான திரு. மஞ்ஜுல திலகரத்னவை நியமித்ததன் மூலம் நீதித்துறை அலுவலர்களது மூப்புரிமை கவனத்திற்கொள்ளப்படாததன் ஊடாக நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் செயலாற்றி அரசியலமைப்பின் 111ஏ உறுப்புரையை மீறியுள்ளாராதலாலும்;

7. 2/2012 மற்றும் 3/2012 ஆம் இலக்க உயர் நீதிமன்ற விசேட தீர்ப்புகள் தொடர்பில் அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையின் கீழான அரசியலமைப்பு நியாயாதிக்கத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி அதே நேரத்தில் பாராளுமன்றத்தின் சபாநாயகருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளபோது, நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவொன்றின் பிரதியை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு ஒப்படைத்தலானது அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நிறைவு செய்வதாகும் என்பதாக மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க நீதிமன்றத்தில் விசேட தீர்பொன்றை வெளியிட்டதன் மூலம் அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையைக் கவனத்திற்கொள்ளாது மற்றும் / அல்லது முரணாகச் செயலாற்றியுள்ளாராதலாலும்;

8. 5/91, 6/91, 7/91 மற்றும் 13/91 ஆம் இலக்க உயர்நீதிமன்ற விசேட தீர்ப்புகளின்போது உயர்நீதிமன்றத்தால் வரைவிலக்கணமளிக்கப்பட்டுள்ளவாறு அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய செயல் நடைமுறைக்கு இணங்கச் செயலாற்றுதல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மேலே கூறப்பட்ட கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க மேற்கூறிய உறுப்புரையை மீறியுள்ளாராதலாலும்;

9. கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது அவரது நியமனத்தை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட சனாதிபதிச் சட்டத்தரணி எட்வட் பிரென்சிஸ் விலியம் சில்வா மற்றும் மேலும் மூவர் எதிர் ஷிராணி பண்டாரநாயக்க (1992 இலங்கை புதிய சட்ட அறிக்கை 92) அடிப்படை உரிமை மீறல் வழக்கின்போது உயர்நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட பெரும்பான்மைத் தீர்ப்பைக் கவனத்திற்கொள்ளாது உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின் மேற்கூறிய தீர்ப்புக்கு எதிராகச் செயலாற்றியுள்ளாராதலாலும்;

10. உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆவதற்கு முன்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தில் விரிவுரையாளராக இருந்தபோது, கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவின் கட்டுரையொன்றை வெளியிட்டிருந்த Groundview எனப்படும் ஊடக வெளியீட்டுப் பிரிவு உரித்தான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எனப்படும் நிறுவனத்தினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 02/2012 ஆம் இலக்க உயர்நீதிமன்ற விசேடத் தீர்ப்பு மனுவை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளாராதலாலும்;

11. பிரதம நீதியரசர் பதவியை வகிக்கின்றவரும் அதனூடாக அரசியமைப்பின் பிரகாரம் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியை வகிக்கின்றவருமான கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு நியமிக்கப்படுவதிலுள்ள தகைமையை ஆட்சேபித்த, சனாதிபதிச் சட்டத்தரணி எட்வட் பிரென்சிஸ் விலியம் சில்வா மற்றும் மேலும் மூவர் எதிர் ஷிராணி பண்டாரநாயக்க (1992 இலங்கை புதிய சட்ட அறிக்கை 92) வழக்கின்போது, மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவின் நியமனத்திற்கு எதிராக நீதவான் குருப்புகே பீட்டா ஆன் வர்ணசூரிய சுவர்ணாதிபதியின் சகோதரரான சட்டத்தரணி எல்.சீ.எம். சுவர்ணாதிபதி என்பவர் மனுவொன்றைச் சமர்ப்பித்ததன் காரணமாக, மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க மேற்கூறிய நீதவான் குருப்புகே பீட்டா ஆன் வர்ணசூரிய சுவர்ணாதிபதிக்கு தொந்தரவு செய்துள்ளாராதலாலும்;

12. பிரதம நீதியரசர் பதவியை வகிக்கின்றவரும் அதனூடாக அரசியமைப்பின் 111ஈ (2) உறுப்புரையின் பிரகாரம் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியை வகிக்கின்றவருமான கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க, அரசியலமைப்பின் 111ஏ உறுப்புரையின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அவரது நியாயாதிக்கத்தைத் தாண்டிச் செயலாற்றி, நீதவான் (திருமதி) ரங்கனீ கமகேவுக்கு தனது சட்டரீதியிலான உரிமைகளைச் செயற்படுத்துவதற்கு முன்னர் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுமாறு கட்டளையிட்டதன் மூலம், நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு. மஞ்ஜுல திலகரத்ன இவரைத் துன்புறுத்தியமை தொடர்பில் பொலீஸில் முறைப்பாடு செய்வதற்கான, நீதவான் ரங்கனீ கமகேயின் சட்டத்தின் உதவியை நாடுவதற்குள்ள உரிமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

13. மேற்கூறிய கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் என்ற வகையிலும் அதனூடாக அரசியலமைப்பின் 111ஈ(2) உறுப்புரையின் பிரகாரம் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையிலும் செயலாற்றி தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி, நீதவான் (திருமதி) ரங்கனீ கமகேவுக்கு பொலீஸ் பாதுகாப்பைப் பெறுவதற்கு முன்னர் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுமாறு கட்டளையிட்டு, அவர் பொலீஸ் பாதுகாப்பைப் பெறுவதற்குள்ள சட்ட ரீதியான உரிமையைத் தடுத்துள்ளாராதலாலும்;

14. தனது சட்ட ரீதியான உரிமையைச் செயற்படுத்தி நீதவான் ரங்கனீ கமகே பொலிஸ் மாஅதிபரிடம் பாதுகாப்புக் கோரியமை தொடர்பில் ஏன் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படாதிருத்தல் வேண்டும் என்பது பற்றி மேற்கூறிய நீதவான் (திருமதி) ரங்கனீ கமகேயிடம் விடுவிப்புக்கான காரணங்களை வினவி நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் செயலாற்றி கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்க நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாக கடிதமொன்றை அனுப்பியுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்டுள்ளவாறு செயலாற்றியதன் மூலம்,—

i. துர்நடத்தை அல்லது பிரதம நீதியரசர் பதவியை வகிப்பவருக்கு தகாத விதத்திலான நடத்தை உறுதிசெய்யப்படுவதாதலாலும்,

ii. நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாகக் கூடியதான விடயங்கள் தொடர்பிலான வினாவெழுப்புதல்களுக்கு அல்லது கருத்துவேறுபாடுகளுக்கு உள்ளாகக்கூடியதான விடயங்கள் தொடர்பில் ஏற்புடையதான மற்றும் / அல்லது ஏற்புடையதாகக்கூடிய விடயங்கள் தொடர்பில் செயலாற்றியுள்ளாராதலாலும்;

iii. நீதி நியாயம் வழங்குதல் தொடர்பில் நிர்ப்பந்தங்களைச் செய்துள்ளாராதலாலும்;

iv. வழக்குத் தரப்பினர்கள் பக்கச்சார்பு மற்றும் / அல்லது பக்கச்சார்பின்மை தொடர்பிலான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு வாய்ப்புள்ளதான ஏதுக்கள் உருவாகலாமென்பதாதலாலும்;

முழுமையாகவே உயர்நீதிமன்றத்தையும் குறிப்பாக பிரதம நீதியரசர் பதவியையும் அவமதிப்புக்கு உள்ளாக்கியுள்ளார்.

ஆதலால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள துர்நடத்தைக் குற்றச்சாட்டுகளின் காரணமாக, மேற்படி துர்நடத்தைக் குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரணை நடத்தி மேற்படி குற்றச்சாட்டுகளில் ஒன்று அல்லது அதற்கு அதிகமானவை எண்பிக்கப்பட்டுள்ளதாக தெரிகுழு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் பட்சத்தில், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து, கௌரவ (கலாநிதி) (திருமதி) உபதிஸ்ஸ அத்தபத்து பண்டாரநாயக்க வாசல முதியன்சே ராலஹாமிலாகே ஷிராணி அங்சுமாலா பண்டாரநாயக்கவை அகற்றுவதற்கானதொரு பிரேரணையை அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கக்கூடியவாறு தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென, மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், அரசியலமைப்பின் 107(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதான 107(2) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரமும், 78அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரமும் பிரேரிக்கின்றோம்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.